(இ) ஆம், எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கூட்டுறவுப் பிரிவிற்கு அரசு ஆணை பிறப்பித்தது. சங்கத்தைப் பற்றிய குற்றச்சாட்டுகள் மிகப் பெரியன என்றும், அவ்வமயமிருந்த சங்கக்குழு சரியாக நிர்வாகத்தைக் கவனிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அதனல் சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு சங்க அலுவல்களைக் கவனிக்க ஒரு தனி அதிகாரி 1970-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் ஊழல்களை அகற்றி அதைச் சரிவர இயங்கவைக்கும்படி அந்த அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இதிலே காணப் பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு எவ்வளவு காலமாகும். அதிலே பங்கு போட்டவர்கள். வீடு கட்டித் தரவில்லை என்று சொல்கிருர்கள். அதைத் தவிர்க்க அரசாங்கமே ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, அந்த சிவானந்தம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் இருக்கிற குறைபாடுகளைப் பற்றியும், அதிலே சில கையாடல்கள் நடந்து இருப்பதாகவும் குறைபாடுகள் வந்து இருக்கின்றன. அதைப் போலவே 3-வது கட்டத்திலே நிலம் வாங்குவதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டு விட்டதாகவும், அந்த நிலப் பரிவர்த்தனை சரியாக நடைபெற வில்லை என்றும் குற்றச் சாட்டுகள் வந்து இருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து, தற்போது இந்த விசாரணை அரசாங்க குற்றத் துணை உதவி வழக்கறிஞர் அவர்களின் கருத்திறிய அனுப்பப்பட்டுள்ளது. அவர் முடிவு சொல்லிய பிறகு, அரசு நடவடிக்கை எடுக்க முடி செய்துள்ளது.

விடுதிகளுக்கு வெளியே தங்கியுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்கள்

* 573 வினு.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி ஹாஸ்டலில் இடமின்மையால் வெளியில் அதிக வாடகை கொடுத்துத் தங்கிப் படிக்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர் களுக்கு ஹாஸ்டலில் தங்கி படிக்கிறவர்களுக்கு வழங்கப்படுவது போல் ஸ்காலர்ஷிப் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

Gift of elephant tusk to Sri Sundara Mahalingam Temple

* 574 Q.—Thiru N. Dennis: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the State has gifted any Elephant Tusk to the Sri Sundara Mahalingam Temple in Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தில், வத்திராயிருப்புக்கு அருகேயுள்ள சதுரகிரி மலையில் உள்ள ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி கோவிலுக்கு, இடது தந்தம் மட்டும் உள்ள யானை ஒன்று தவறுமல் வந்து கொண்டிருந்ததாகவும், பின்பு அந்த யானை இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ளவர்கள், இறந்து போன அந்த யானையின் நடத்தை தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதி, அதன் தந்தத்தைக் கோவிலில் வைத்துப் பாதுகாத்து வழிபட விரும்பினார்கள். பொது மக்களிடமிருந்து வந்த மனுக்களை அரசு பரிசீலித்து, இறந்துபோன அந்த யானையின் தந்தத்தைக் கோவிலில் வைப்பதற்கு இனமாகக் கொடுக்க 13—5—1971ல் அரசு ஆணையிட்டுள்ளது.

Nationalisation of Bus routes

* 575 Q.—Thiru N. K. PALANISAMI :
Thiru N. KUTTAPPA :
Thiru A. M. RAJA :

Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to further nationalise some more bus routes in the State?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 31—3—1971 வரை 302 பேருந்து வழித்தடங்களை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. 1971–1972-ல் 184 வழித்தடங்களையும், 1972–73-ல் 34 வழித்தடங்களையும் அரசு மேற்கொள்ளும்.

அதுவன்றியும் 50-க்கு மேல் உள்ள வழித்தடங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் 550 பேருந்துகள் தேச உடமையாக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 500-க்கு மேற்பட்ட பஸ்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்றார்கள். இன்றைய தினம் அந்த பஸ் கம்பெனிகளில் பஸ்களை சரிவரப் பழுது பார்க்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த பஸ்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறபோது குறைவாகவே கொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகள் பழுது பார்க்கப்படுகின்றனவா இல்லையா என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அவைகளுக்குரிய கட்டணத்தைத் தருவது என்று தீர்மானித்திருக்கிறோம். பாராளுமன்றத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்ட திருத்தம் வர இருக்கிற காரணத்தினால் அதுபற்றி அறிந்த பிறகே அரசு முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஐம்பது மைல்களுக்கு மேல் உள்ள வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்படுகிற சட்டம் இந்தச் சட்டத் தொடரிலே வராவிட்டாலும் அடுத்த தொடருக்குள்ளாவது வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள ஆர்வத்தைப்போலத்தான் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டுமென்று இருந்தோம். நாடாளு